**குருவிட்ட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும்விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் குருவிட்ட பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி திகதியில் 40 வேலைகளுக்காக பெறப்பட வேண்டிய ரூபா 47,660,468 கணக்கீடு செய்யப்படடிருக்கவில்லை. | பெற வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | வாகன பராமரிப்பு செலவினம் ரூபா 74,143 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. | மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |
| (இ) | மீளாய்வாண்டில் கெள்வனவு செய்திருந்த கதிரைகளின் பெறுமதி ரூபா 162,626 யினால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வருமானம் ரூபா 2,808,793 யினால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |
| (உ) | மீளாய்வாண்டிற்காக பில் இடப்பட்ட வீதவரி மற்றும் ஏக்கர் வரி வருமானம் ரூபா 373,074 யினால் குறைத்து கணக்கீடு செய்திருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. |
| (ஊ) | 07 கணக்கு விடயங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் | நிதிக்கூற்று மற்றும் துணை பதிவேடுகளில் | மாதாந்த பெறுவனவுடன் பரிசீலனை செய்து ஒப்பிட்டு சரி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் துணை பதிவேட்டு பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 61,948,038 தொகை வேறுபாடு ஆனது. | கணக்கு மீதிகளை சரியாக காண்பிக்க வேண்டும். | ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (எ) | 06 வருமான தலைப்புகள் தொடரபான கூட்டிணைந்த பெறுவனவுப் பொழிப்பு பிரகாரம் சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் பொழிப்பு வருமான பதிவேட்டின் பிரகாரம் சேர்க்கப்பட்ட வருமானத்திற்கிடையில் ரூபா 830,305 ஆன வேறுபாடு ஆனது. | நிதிக்கூற்று மற்றும் துணை பதிவேடுகளில் கணக்கு மீதிகளை சரியாக காண்பிக்க வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது மிகக் கவனமாக செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 204 | 2016 மற்றும் 2017 வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்ட ரூபா 87,875 ஆன 11 அலகு பொருட்கள் மற்றும் 384 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பற்றாக்குறையான புத்தகங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 371(2)இ | 2009 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை காலபகுதினுள் வழங்கப்பட்டிருந்த ரூபா 932,308 ஆன முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | இது தொடர்பாக விடய உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதுடன், முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (ii) நிதிப் பிரமாணம் 571 | 2001 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை காலத்திற்கான ரூபா 11,527,994 ஆன காலம் கடந்த வைப்பு தொடர்பாக | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது வைப்புப் பதிவேடு நாளர்துவரயாக்குவதற்காக செலவின பதிவேட்டு வவுசரகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | அனைத்தையும் பரிசீலனை செய்துக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக கனிசமான காலமொன்று செலவாகும் என குறிப்பிடுகிறேன். |
| (iii) | நிதிப் பிரமாணம் 1645 | சபைக்கு சொந்தமான 08 வாகனங்களில் ஓட்டக குறிப்புகளை உரிய முறையில கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சபைக்கு சொந்தமான வாகனங்களின் ஓட்டக் குறிப்புகளை 2019 ஆண்டிற்காக உரிய முறையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முன் நடவடிக்கை செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (இ) | 2015 ஜுலை 10 ஆம் திகதிய 2/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3 பந்தி | பராதீனத்திற்காக பொருத்தமான வாகனங்களை இனங்காணல், நியமிக்கப்படும் விசேட ஆய்வு குழுவினால் மேற்கொள்ளாது இரத்தினபுரி டிபோ உதவி பொறியியலாளர் ஒருவரூடாக 03 வாகனங்களிற்காக பராதீன அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | சபையிடம் விசேட ஆய்வு குழுவொன்று மற்றும் சம அறிவுடைய நபர்கள் இல்லாததனால் டிபோ பொறியியலாளர் மூலம் அவ் வாகனங்களை பரீட்சித்து அறிக்கை பெற்றுக் கொண்டேன். |
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய பீஈ/01/01 இலக்க மின்சாரம் மற்றும் வலு அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை 1.3 பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுளிற்கு முரனாக சபை அதிகார எல்லையினுள் 25 வீதி விளக்கு அலகுகள் மீளாய்வாண்டினுள் பொருத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | எதிர்காலத்தில் புதிய செயற்பாடு மேற்கொள்ளும் போது சரியாக செயற்படுவதாக குறிப்பிடுகிறேன். |

**2. நிதி மீளாய்வு**

--------------------

**2.1 நிதி விளைவுகள்**

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,556,116 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,298,073 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம்,சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 4,361,429 | 3,492,486 | 3,451,687 | 4,603,567 | 2,313,624 | 3,551,623 | 4,222,649 | 3,854,219 |
| (ii) | வாடகை | 6,889,007 | 6,638,685 | 6,810,605 | 1,720,321 | 7,345,665 | 6,608,828 | 6,626,857 | 2,598,147 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,225,150 | 2,080,378 | 2,076,028 | - | 1,773,000 | 2,643,275 | 2,636,040 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 21,777,804 | 28,394,418 | 23,473,754 | 38,830,796 | 41,701,040 | 38,762,500 | 21,345,725 | 40,027,736 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு ரூபா 4,090,976 ஆன நிலுவை வீதவரியினுள் 05 ஆண்டுகளை விஞ்ஞிய காலத்திலிருந்து நிலவி வரும் ரூபா 1,851,336 ஆன 301 வீத வரி அலகுகள் உள்ளடங்கியுள்ளது. நிலுவை மீதிகளை அறவிடல் தொடர்பாக சபையின் செயற்பாடு பழவீனமான நிலையில் இருந்தது. | நிலுவை வீதவரி அறவிடலுக்காக முறையான வேலைத்திட்டமொன்று திட்டமிட்டு செயறபடுத்தப்பட வேண்டும். | தற்போது வருமான பரிசோதகர்கள் அறிவூட்டப்பட்டு நிலுவை வீதவரியின் 30 சதவீதமான அளவொன்று அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு ரூபா 512,592 ஆன நிலுவை ஏக்கர் வரியினுள் 05 ஆண்டுகளை விஞ்ஞிய காலத்திலிருந்து நிலவி வரும் 376 அலகுகளின் அறவிட வேண்டிய ரூபா 269,809 ஆன தொகை உள்ளடங்கியுள்ளது. | நிலுவை வருமானம் சேகரித்தலுக்கு முறையான வேலைத்திட்டமொன்று திட்டமிட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | மீள பரிசீலனை செய்து வரி தொகை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆண்டின் போது புதய வியாபார கட்டிடத்தொகுதியில் 05 கடையறைகள் ஒப்பந்த கைச்சாத்திடலின்றி வழங்கப்பட்டமையால் செலுத்த மறுக்கப்பட்ட நிலுவை கடையறை வாடகை ரூபா 4,436,000 தொகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | கடையறைகள வாடகைக்கு வழங்கும் போது உரிய முறையில் ஒப்பந்தம் கைச்சாத்திட வேண்டியதுடன் பொறுப்புதாரர்கள் உருதிப்படுத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். | அக்காலத்து உத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் இல்லாததுடன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. இந் நிலுவையை பதிவலிக்க சபைக்கு முன்வைக்கப்பட்ட போது அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதனால் மீண்டும் மாகாண ஆணையாளரின் ஆலோசனையை பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | புதய வியாபார கட்டிடத் தொகுதியில் 30 ஆம் இலக்க கடையறை 2013 ஆண்டில் ஒப்பந்தமொன்றின் மூலம் ரூபா 3,420 ஆன மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த பிரகாரம் கடையறை வாடகை செலுத்தாத சந்தர்ப்பத்தில் சடட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் வாடகை காலம் முடிந்த பின் 2017 ஆண்டு வரை ஒப்பந்தமின்றி கடையறையை நடாத்திச் செல்ல இடமளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வாடகை மற்றும் தண்டப்பண கூட்டுத் தொகை ரூபா 202,895 அறவிட சபைக்கு இயலாதிருந்ததுடன் குறித்த கடையறையை 2017 ஆகஸ்ட் முதல் வருமானம் ஈட்டப்படாது மூடப்பட்டிருந்தது. | ஒப்பந்த மீறுதல் தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கடையறையை வாடகைக்கு வழங்கி வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டாம் முறையும் டென்டர் கோரப்பட்ட போதும் அவ்வித டென்டரும் சமர்பிக்கப்படாததுடன் டென்டர் தொகையின் 10 சதவீதத்தை குறைத்து டென்டர் கோருவதற்கு தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்படுகிறது. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத வேலைகளை இனங்காணுவதற்காக சபை முறையான ஒழுங்கு | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் முறையாக மேற்கொள்ள வேண்டும். | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத வேலைகள் தொடர்பாக கள பரிசோரனை மூலம் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2018 ஆண்டு புதிப்பிக்கவிருந்த அனுமதிப்பத்திரங்களிற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| முறையொன்று கடைப்பிடித்திர்க்கவில்லை. மாதிரி பரிசீலனை பிரகாரம் 2018 மார்ச் முதல் ஜுன் வரை காலப்பகுதியினுள் ஏற்புடைய காலம் முடிவடைந்த 03 நிறவனங்களின் சுற்றாடல் அனுமதிபத்திரம் மீளாய்வாண்டு இறுதி வரையும் புதுப்பித்திருக்கவில்லை. | | |

**2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 4,323,105 ஆனதுடன், 2015 மற்றும் 2016 இரண்டாண்டுகளுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 42,461,294 தொகை ஆனது. 2017 மற்றும் 2018 இரண்டாண்டுகளுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2019 சனவரி வரையும் இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்துக்கொள்ள் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டபணம் மாகாண சபைக்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்படுவதுடன், முத்திரைக் கட்டணம் பெற்றுக் கொள்வதற்கு மாகாண வருமான ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் சுகாதார, நூலகம், பாலர் பாடசாலை மற்றும் ஆயர்வேத போன்ற பிரிவுகளினால் ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்த அபிவிருத்தி கருத்திட்டங்கள்/நிர்மாணங்கள் | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கிய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட கால எல்லைகள் | 2019 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| மற்றும் எதிர்பார்த்த செயற்பாடுகளை குறிப்பிடப்படாததுடன் திட்டத்தின் உள்ளடக்கிய செயற்பாடுகளுக்காக குறிப்பிட்ட கால எல்லைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இனங்கண்டிருக்க வேண்டும். |

(ஆ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நான்கு வருட அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டில் பெறுமத் ரூபா 10,510,000 ஆன 31 அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்ட போதும், மக்கள் பிரதி அபிப்பிராயம் மற்றும் ஆலோசனைகளிற்காக முக்கியத்தும் வழங்க ஏற்பட்டதனால் அக் கருத்திட்டங்கள் எதனையும் ஆண்டினுள் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | அதிகார எலலையில் நிறைவேற்ற வேண்டிய அபிவிருத்தி கருத்திட்டங்களில் முக்கியத்துவத்தை இனங்கண்டு திட்டம் தயாரித்து செயற்படுத்த வேண்டும். | குறித்த காலப்பகுதியில் மக்கள் பிரதிநிதிகளின் அபிப்பிராயம் மற்றும் ஆலோசனைகளின் படி சபையின் அங்கீகார கருத்திட்டங்களிற்காக மாத்திரம் முக்கியத்துவம் வழங்கி செயற்படுத்தியுள்ளது. |

(இ) **எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | குருவிட பெரடய்ஸ் புதிய கிராம நீர் கருத்திட்டத்திற்காக 2014 ஆண்டின் போது ரூபா 1,582,215 செலவில் வெட்டப்பட்ட கிணற்றில் நீர் துருவுடன் காணப்பட்டதனால் 2015 ஆண்டில் ரூபா 270,000 செலவில் கிணற்றை சுற்றி மணல் தட்டொன்று இடப்பட்ட போதும், நீருடனான துரு நிலையினை அகற்றி நீரை குடிக்கும் நிலைக்கு கொண்டுவர முடியாதிருந்தது. கிணற்றை அகழ்வதற்கு முன் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ளவோ அல்லது நிபுணத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளவோ நடவடிக்கை எடுக்காமை இதற்கு காரணமாக இருந்தது. | இவ்வாறான சாத்தியப்பாட்டு ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டியதுடன் கருத்திட்ட நோக்கமாகிய குடிப்பதற்கு பொருத்தமான நீரை பெற்றுக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 ஆண்டில் கிணற்றை சுற்றி மணல் தட்டொன்றை இடல் நீர் வழங்கல் சபையின் அறிவூட்டலின் மீது மற்றும் நீர் கருத்திட்ட நிர்வாக உத்தியோத்தரால் விடுக்கப்பட்ட கோரிக்கை மீது மேற்கொள்ளப்பட்டது. நிர் சுத்திகரிப்பானின் செயற்பாடு பூர்தியானவுடன் மீண்டும் துரு ஏற்படுவதாக தொழல் நுட்ப அலுவலர் அறிக்கையிட்டிருந்தார். அது சுற்றாடல் செயற்பாடுகளினாலானது எனவும் அறித்திருந்தார். அதற்காக நீர் சுத்திகரிப்பு முறைமை ஒன்றிற்கு போக வேண்டுமென குறிப்பிடுகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டளவில் இக் கருத்திட்டத்திலிருந்து நீரை பெற்றுக் கொள்ளும் பயன்பாட்டாளர்கள் 125 பேர்களுக்கு பொருத்தமான குடிநீர் கிடைக்காததனால் பிரதேச சபை மற்றும் மனித வள அபிவிருத்தி அடிப்படை ஒன்றாக இதற்காக செலவிட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 9,952,874 குறை பயன்பாடிற்குள்ளாகியிருந்தது. | கருத்திட்ட நோக்கை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் வசதியை கோரியுள்ள நீர் பாவனையாளரகளின் எண்ணிக்கை பிரகாரம் நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.சுற்றாடல் வேறுபாடிற்கு அமைய நீரில் மாற்றங்கள் ஏற்படுவதனால் நிலையான நீர் சுத்திகரிப்பு முறைமையொன்றுக்கு செலவதானால் பெறுந் தொகை பணம் செலவிட வேண்டி ஏற்படும். அதற்காக குறித்த கருத்திட்டத்திற்கு பணம் இல்லையென அறிக்கையிடுவதுடன், இப்போது நீர் பாவனையாளர்கள் இக் கருத்திட்டத்தின் நீரை மறுக்காமல் பாவினைக்கு பெறறுக் கொள்வதாக குறிப்பிடுகிறேன். |

(ஈ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முறையான கழிவு பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் சபைக்கு இயலாமலிருந்து. | முறையான கழிவு பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | தற்போது பொஹொரபாவ காணியுனுள் குப்பை வேறுபிரிப்பதற்காக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுததுடன் அது பூர்த்தியடையும் போது இயற்கை பசளை உற்பத்தி செய்வதற்கு மற்றும உக்களடையாத கழிவுப் பொருட்களை முடிந்தவரை மீள்சுழற்சிக்குற்படுத்த நடவடிக்கை தயார் செய்யப்படுகிறது. |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான | நீண்ட கால திட்டத்தை தயாரித்து செயற்பட வேண்டும். | நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காத போதும் எதிர்காலத்தில் செய்வதற்கு எதிர்பார்கிறேன். |

நீண்ட கால திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளனியை விஞ்சி சேவை ஒப்பந்தம் மீது நியமிக்கப்பட்ட 05 ஊழியர் களுக்காக 2011 செப்தெமபர் முதல் 2018 ஜுலை வரையான காலத்திற்கு சபை நிதியத்தினால் ரூபா 3,546,698 ஆன சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செலுத்திருந்தது. | மிகை ஊழியர்களை முறையாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளனி எண்ணிக்கயை விஞ்சி சேவை ஒப்பந்தத்தின் மீது ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டுள்ளமை, நாலாந்த வேலைகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் போதாமையினாலாகும். |

**3.3 சொத்துக்கள் முகாமை**

3.3.1 **சொத்துக்கள் பதிவிடப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 149,950,452 ஆன நடைமுறை அல்லாத சொத்துக்களை உள்ளடக்கிய சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**3.3.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 வருடங்களாக ஓட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்று மற்றும் ஒராண்டாக ஓட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள டெக்டர் வண்டியை பழுதுபார்ப்பதற்கு அல்லது பொருத்தமான செயற்பாட்டினை மேற்கொள்ள மீளாய்வாண்டு இறுதி வரையும் சபைக்கு இயலாமலிருந்தது. | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். | அவ் வாகனங்கள் மேலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளில் இடப்பட்டுள்ளது. அந் நடவடிக்கைகள் முடிவடைந்து ஓட்டத்திற்கு தகுதியானவுடனே வருமான அனுமதிப்பத்திரம், துகை கசிவு சான்றிதல், காப்புறுதி சான்றிதழ் பெற்றுக் கொள்ள முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.3.3 சுவீகர்க்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 முதல் 2015 வரையான காப்பகுதினுள் மாகாண சபையும் உள்ளூராட்சி அமைச்சினாலும் மற்றும் சபரகமுவ மாகாண சபையினாலும் கிடைத்திருந்த 17 வாகனங்களில் உறுத்துரிமையை சபைக்கு சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சபையினால் பயன்படுத்தும் வாகனங்களின் உறுத்துரிமையை ஆவனரீதியாக சுவீகரித் கொள்ள வேண்டும். | சுவீகரிப்பதற்கு முன் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | இடுகாடு பதிவேட்டில் உள்ளடங்கிய 50 இடுகாடுகளின் 49 யை சபைக்கு சட்டபூர்வமாக சுவீகரித்துக் கொள்ள இயலாமலிந்தது. | குறித்த காணிகளை சபைக்கு சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடுகாடு சுவீகரிக்கும் நடவடிக்கை நாளாதுவரையாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 3.3.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 மற்றும் 2017 ஆண்டுகளில் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சினால் மற்றும் சபரகமுவ மாகாண சபையினால் கிடைத்திருந்த 02 கழி டேலர்களில் மலக் கழிவுகளை வெளியேற்ற இடம் ஒன்று இல்லாத காரணத்தால் சபை வளவில் விளைவற்று நிலவியது. | குறித்த சேவை வழங்கும் ஏனைய உள்ளூராட்சி நீறுவனமொன்றுக்கு வழங்கயேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மலக் கழிவுகளை வெளியேற்ற சபைக்கு சொந்தமான இடமொன்று தப்போதும் இல்லாததனால் விளைவற்று நிலவுகிறது. |

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கலகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரசை நீர் விநியோகம் மற்றும் ஆரோக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவி மீது 1997 ஆண்டின் போது குருவிட்ட சிறு நகர நீர் விநியோக உத்தேச திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடு வழங்கும் போது கருத்திட்ட செலவின் 20 சதவீதத்திற்கான சமுதாய பங்களிப்பொன்று பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், கருத்திட்டத்தின் வேலை | சமுதாய அடிப்படை சங்கத்தை வழுவூட்டி நீர் உத்தேச திட்டத்தை அதற்கு ஒப்படைக்க அல்லது சபையினால் கட்டுப்படுத்தும் நீர் கருத்திட்மொன்றாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | மனித வள அபிவிருத்தி அடிப்படை பெயரில் நிலவிய சமுதாய அடிப்படை சங்கத்தில் காணப்பட்ட முறைகேடுகள் காரணமாக உள்ளூராட்சி ஆணையாளர் தலையிட்டு பிரதேச சபைக்கு அதன் நிருவாக அதிகாரத்தை 06 மாதங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரை மனித வள அபிவிருத்தி அடிப்படை செயற்பாட்டு நிலையில் |

| | | |
|---|---|---|
| பூர்த்தியானதன் பின்னர் அது அரச கட்டுப்பாடின்றி பிரசையினால் கட்டுப்படுத்தப்படும் கருத்திட்டமொன்றாக வேணடும் என உலக வங்கி நிபந்தனைகள் விதிக்கப்படடிருந்தது. எனினும் அவ்வாறான நிபந்தனைகளுக்கு முரணாக, சமுதாய அடிப்படை சங்கங்கள் வழுவூட்டி மீள் ஒப்படைக்கும் நோக்கத்தில் 06 மாத காலமொன்றுக்காக 2006 செப்தெம்பர் 01 திகதி சபைக்கு சுவீகரித்துக்கொன்டிருந்த நீர் கருத்திட்டத்தை 12 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அந்த சங்கத்திற்கு மீள் ஒப்படைத்திருக்கவில்லை. | | இல்லாததனால் பிரதேச சபையினால் உருவாக்கப்பட்ட நிரைவேற்று குழு மேற்பாரவையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

**3.5 பெறுகை**

------------

**பெறுகைகள் திட்டம்**

----------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 7,735,565 ஆன பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

------------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

பின்வரும் விடயங்கள் காரணமாக வருடாந்த பாதீட்டை நதிக் கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்த சபைக்கு இயலாமலிருந்தது.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 07 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 1,472,500 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்க வேண்டியதுடன், அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | எதிர் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். அவ்வாறே இந்த ஏற்பாடுகளும் விடய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 06 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 1,042,000 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 80 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்க வேண்டியதுடன், அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக | எதிர் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். அவ்வாறே இந்த ஏற்பாடுகளும் விடய உத்தியோகத்தர்களுடன் |

| | | |
|---|---|---|
| வீச்சலவான வீதத்தில் சேமிப்பாக இருந்தது. | பயன்படுத்த வேண்டும். | கலந்துரையாடி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டுள்ளது. |

**4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கியுள்ள ரூபா 8,888,411 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை பரிசீலனை செய்ய தேவையான தகவல்களை சமர்பித்திருக்கவில்லை. | குறித்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான தேவையான விரிவான அட்டவணை மற்றும் மீதி உறுதிப்பாடுகளை சமர்பிக்க வேண்டும். | இவ் மீதிகள் முன்னரிலழருந்து நிலவி வருவதுடன் 2019 ஆண்டின் போது தயாரிக்கும் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் போது பெற்றுத் தருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |